OS: 201/2024

Date: 25.08.2025

பெயர் : முத்துமாணிக்கம்

<u>வாதி தரப்பு சாட்சி 1.</u>

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

1. இந்த வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் 1/5 ஒரு பாகம் கேட்டுதான் தாக்கல் செய்திருந்தேன் என்றால் நினைவில்லை. வழக்கு தாக்கல் செய்த பின்னர் தான் எனது தகப்பனார் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். எனது தகப்பனார் இறந்த பின்னர் வாரிசு அடிப்படையில் எனது தாயாரை மட்டும் இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்த்தேன் என்றால் ஆமாம். என் தாயாரை சேர்த்து பிராதை திருத்திய பின்னர் எனக்கு 6/25 பாகம் வேண்டும் என்று கேட்டேன் என்றால் ஆமாம்.

2. எனது சகோதர்களுக்கும் 6/25 பாகம் ஒதுக்கும்படி கோரியிருந்தேன் என்றால் ஆமாம். என் தாயாருக்கு ¼ பாகம் கேட்டிருந்தேன் என்றால் ஆமாம். என் தாயார் இறந்த பிறகு எனது சகோதரிகளை 6 முதல் 9 பிரதிவாதிகள் வரை தரப்பினர்களான சேர்த்தேன் என்றால் எனக்கு நினைவில்லை. என் தாயார் இறந்த பின்னர் 9/40 பாகம் தான் எனக்கும் எனது சகோதரர்களுக்கும் வரும் என்றாலும், ஆனால் 8/40 பங்கு கேட்டிருக்கிறேன் என்றாலும், எனது சகோதரிகளுக்கு 1/40 பங்கு தான் வரும் என்றாலும் எனக்கு நினைவில்லை.

3. இந்த வழக்கு நிலுவையில் இருந்த போது எனது சகோதரர் பூபாலனை பி.வா.சா.1 ஆக விசாரித்து நிலுவையில் இருந்தபோது பூபாலன் வாரிசுகளான ரங்கேஷ் என்கிற ஜெயராமகிருஷ்ணன் மற்றும் முத்துகிருஷ்ணன் என்கிற விக்னேஷ் ஆகியோர்களை 10, 11 பிரதிவாதிகளாக இந்த வழக்கில் சேர்த்தேன் என்றால் ஆமாம். ரங்கேஷ் என்கிற ஜெயராமகிருஷ்ணன் மற்றும் முத்துகிருஷ்ணன் என்கிற விக்னேஷ் ஆகியோர்களை எதற்காக இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்தேன் என்றால் எனது தகப்பனார் பாகம் பிரிக்காத சொத்தில் உயில் எழுதி வைத்ததால் அவர்களை சேர்த்திருக்கிறேன்.

4. அந்த உயிலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், இல்லை தாக்கல் செய்திருக்கிறேன். உயிலை இரத்து செய்துவிட்டு எனது தகப்பனார் 10, 11 பிரதிவாதிகள் பெயரில் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்திருக்கிறார் என்றால் அது செல்லாது எங்களுக்கும் பங்கு இருக்கிறது. நான் சொல்வது போல் தான

செட்டில்மெண்ட் செல்லாததாகது என்றாலும், செட்டில்மெண்ட் எழுதி வைக்க எனது தகப்பனாருக்கு உரிமை உள்ளது என்றாலும் சரியல்ல. சொத்து என் அப்பா சம்பாதித்தல்ல, அது பூர்வீக சொத்து எனவே செட்டில்மெண்ட் செல்லாது. அந்த செட்டில்மெண்ட் செல்லாது என்று அதனை தாக்கல் செய்து அதற்கு பரிகாரம் கேட்டிருக்கிறேன் என்றால் ஆமாம்.

5. தான செட்டில்மெண்டில் கண்ட சொத்தை தாவா 2வது அயிட்டமாககாட்டி வழக்கு நடத்திவருகிறேன் என்றால் ஆமாம். 2வது அயிட்ட சொத்து அவருக்கு வாரிசு அடிப்படையில் வந்ததால் அதை குறித்து கேள்விகேட்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. அது பூர்வீக சொத்துதான். பூர்வீக சொத்து என்பதை காண்பிக்க ஆவணம் நீதிமன்றத்தில் ஒப்படைத்திருக்கிறேனா என்றால், சாட்சி என் அப்பாவிற்கு தனிப்பட்ட சொத்து என்பதற்கு அவர்கள் என்ன ஆவணம் ஒப்படைத்திருக்கிறார்கள் என்று கேட்கிறார்.

6. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 ஆவணம் என் தகப்பனார் பெயரில் தனிப் பட்டாவாக இருக்கிறது என்றால், கிரைய பத்திரம் என் தாத்தா பெயரில் பத்திர அலுவலகத்தில் இருக்கிறது.

<u>பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.</u>

(ஒப்பம்/-T.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.